ServiceOntario




# உங்கள் ஒன்ராறியோ ஆரோக்கிய அட்டைக்கு நீங்கள் விண்ணப்பித்தல்

## ஒன்ராறியோவுக்கு உங்கள் வரவு நல்வரவாகுக!

ஒன்ராறியோவில் வசிக்கும் ஒருவராக நீங்கள் இருந்தால், உங்களிடம் ஆரோக்கிய அட்டை ஒன்று இருக்கும்பொழுது ஒன்ராறியோ ஆரோக்கிய காப்புறுதித் திட்டத்தினால்(ஓஹிப்) கட்டணம் செலுத்தப்படும் ஆரோக்கிய பராமரிப்புச் சேவைகளுக்கான தகைமையை நீங்கள் பெற்று இருக்கிறீர்கள் என்று அர்த்தமாகும்.

உங்களிடம் ஒன்ராறியோ ஆரோக்கிய அட்டை ஒன்று ஒருபோதுமே இருந்திராவிட்டால், சேவைஒன்ராறியோ **(ServiceOntario)** நிலையம் ஒன்றில் நீங்கள் அதற்கு விண்ணப்பிக்க வேண்டும். ஆனால் நீங்கள் ஒரு நிலையத்திற்கு விண்ணப்பிக்க எனச் செல்ல முன்னர், பின்வரும் படிமுறைகளைப் பின்பற்றுங்கள்:

1. **ServiceOntario.ca/HealthCard** என்னும் இணையத்தளத்திற்குச் செல்லுங்கள்:
   - ஒன்ராறியோ ஆரோக்கிய காப்பீட்டுக்கான பதிவு ( படிவம் 0265-82)/Registration for Ontario Health Coverage (form 0265-82) ஒன்றினை அச்சிட்டுப் பூர்த்தி செய்யுங்கள்
   - என்ன ஆவணங்கள் தேவை என்பதைப் பார்வையிட (முழுப் பட்டியல் பின்பக்கத்தில் உள்ளது) ஒன்ராறியோ ஆரோக்கிய காப்பீட்டு பத்திரப் பட்டியல் (படிவம் 9998ஈ-82)/ Ontario Health Coverage Document List (form 9998E-82) ஒன்றைப் பார்வையிடுங்கள்
2. உங்களுக்கு மிக அருகாமையில் உள்ள ஒரு சேவைஒன்ராறியோ நிலையத்தைக் கண்டறிய, **ServiceOntario.ca/FindServices** இணையத்தளம் பார்வையிடுக
3. பூர்த்தி செய்யப்பட்ட பதிவுப் படிவத்தையும் தேவைப்படும் எல்லா ஆவணங்களையும் எடுத்துக் கொண்டு ஒரு சேவைஒன்ராறியோ நிலையத்திற்குச் செல்லுங்கள்.

## தேவைப்படும் ஆவணங்கள்

- பட்டியல் **1** – கனேடிய பிரஜா உரிமை அல்லது ஓஹிப் இற்கான தகைமை கொண்ட குடிவரவு அந்தஸ்துக்கான சான்று இந்தப் பட்டியலிலுள்ள ஆவணங்கள் - நீங்கள் ஒரு கனேடிய பிரஜை என்பதை அல்லது ஒன்ராறியோ ஆரோக்கிய காப்புறுதிக்கான காப்பீட்டிற்கு உங்களைத் தகுதி உடையவராக்கும் வேறு குடிவரவு அந்தஸ்தினைக் கொண்டவர் என்பதை உறுதிப்படுத்துகின்றன.
- பட்டியல் **2** – ஒன்ராறியோ வதிவுக்கான சான்று
  இந்தப் பட்டியலில் உள்ள பத்திரங்கள் உங்கள் பெயரையும் தற்போதைய வீட்டு முகவரியையும் காட்டி உங்கள் முதன்மையான வதிவிடம் ஒன்ராறியோவில் உள்ளது என்பதை உறுதிப்படுத்தும்.
- பட்டியல் **3** – அடையாளத்திற்கான ஆதாரம்
  இந்தப் பட்டியலில் உள்ள ஆவணங்கள் உங்கள் பெயர், கையொப்பம் இரண்டையும் காட்டும்.

ஒவவொரு படட்யலில் இருநதும் ஒர ஆவணதத்தந நீக்ள் எபபொழுதும் கொணடுவர வேணடும்.ம.

- **நீங்கள் ஆயத்தமாக இருங்கள்:** அப்படி இருந்தால் சேவைஒன்ராறியோ நிலையத்திற்கு ஒரு முறை மட்டுமே செல்லும் தேவை ஏற்படும்.
- **சகலதும் மூல ஆவணங்களாக இருத்தல் வேண்டும்** - போட்டோ பிரதிகள் அல்லது அச்சுப் பிரதிகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

Ontario

ServiceOntario

## பட்டியல் 1 பிரஜா உரிமை/ ஓஹிப் தகைமை பெறும் குடிவரவு அந்தஸ்துக்கான ஒன்றைத் தெரிவு செய்யுங்கள்:

### கனேடியப் பிரஜைகள்

- செல்லுபடியாகும் கனேடிய கடவுச்சீட்டு (Passport) அல்லது ஐந்து வருடங்களுக்கு மேற்படாமல் காலாவதியான கனேடிய கடவுச்சீட்டு
- கனேடிய மாகாணம் அல்லது பிராந்தியம் ஒன்றினால் வழங்கப்பட்ட பிறப்புச் சாட்சிப்பத்திரம் (பிறப்பிறப்புப் புள்ளிவிபர சட்டத்தின் கீழ் வழங்கப்பட்டது)
- வெளிநாட்டில் பிறந்தமைக்கான கனேடிய பதிவு சாட்சிப்பத்திரம்
- கனேடிய மாகாணம் அல்லது பிராந்தியம் ஒன்றினால் வழங்கப்பட்ட உயிருடனான பிறப்பிற்கான உறுதிசெய்யப்பட்ட வாக்குமூலம்
- கனேடிய பிரஜாஉரிமை சாட்சிப் பத்திரம் அல்லது பிரஜாஉரிமை ஏற்புச் சாட்சிப்பத்திரம் (கடுதாசி ஆவணம் அல்லது அட்டை: ஞாபகச் சடங்கு இதழ் அல்ல)
- பூர்வீக இந்திய அந்தஸ்து சாட்சிப்பத்திரம் (கடுதாசி அல்லது பிளாஸ்டிக் அட்டை)
- பதிவு செய்யப்பட்ட பூர்வீக இந்தியப் பதிவேடு (உறுதிசெய்யப்பட்டது)

### நிரந்தர வதிவாளர்கள் / வதிவிட உரிமைபெற்ற குடிவரவாளர்கள்

- செல்லுபடியாகும் நிரந்தர வதிவாளர் அட்டை அல்லது ஐந்து வருடங்களுக்கு மேற்படாமல் காலாவதியான நிரந்தர வதிவாளர் அட்டை
- கனேடிய குடிவரவு அடையாள அட்டை
- நிரந்தர வதிவிட உறுதிப்பத்திரம் (IMM 5292, 5688)
- வதிவிட உரிமை வழங்கும் பதிவுப்பத்திரம் (Record of Landing) (IMM 1000)

### வேறு குடிவரவு அந்தஸ்து

- குடிவரவு மற்றும் அகதி சபையிலிருந்து பெறப்பட்ட ஒப்பந்த அகதி அல்லது பாதுகாக்கப்பட்ட நபர் அந்தஸ்தினை உறுதிப்படுத்தும் கடிதம்
- பாதுகாக்கப்பட்ட நபர் அந்தஸ்தைக் காட்டும் ஆவணம்
- தற்காலிக வதிவாளர் அனுமதிப் பத்திரம் (கட்டுப்பாடுகள் கொண்டது)
- வேலை செய்வதற்கான அனுமதிப்பத்திரம் (முழு-நேரமாக ஒன்ராறியோவில் தொழில் செய்வதனை உறுதிசெய்யும் பத்திரம் தேவைப்படலாம்)
- பிரஜாஉரிமை மற்றும் குடிவரவு கனடா அமைப்பிலிருந்து பிரஜாஉரிமைச் சட்டம் (கனடா) 5.1 பிரிவின் கீழ் கனேடிய பிரஜா உரிமையைப் பெற்றுக் கொள்ள விண்ணப்பம் செய்வதற்கு நீங்கள் தகைமை உடையவர் என்பதைக் கூறும் எழுத்துவடிவ உறுதிப்பாடு
- பிரஜாஉரிமை மற்றும் குடிவரவு கனடா அமைப்பிலிருந்து நிரந்தர வதிவு உரிமையைப் பெற்றுக் கொள்ள விண்ணப்பம் செய்வதற்கு நீங்கள் தகைமை உடையவர் என்பதைக் கூறும் எழுத்துவடிவ உறுதிப்பாடு
- பதிவு ஆவணத்தின் தற்காலிக உறுதிப்பாடு

☐ பின்வரும் பட்டியலில் இருந்து ஓர் ஆவணம்:

**பட்டியல் 1 பிரஜா உரிமை அல்லது ஓஹிப்-தகைமை பெறும் குடிவரவு அந்தஸ்துக்கான சான்று**

நீங்கள் ஒரு கனேடியப் பிரஜை என்பதை அல்லது ஒன்ராறியோ ஆரோக்கிய காப்புறுதிக் கட்டணமளிப்பு காப்பிற்கு உங்களைத் தகுதி பெறவைக்கும் வேறொரு குடிவரவு அந்தஸ்தினை கொண்டிருப்பதை உறுதிப்படுத்தும் ஓர் ஆவணம்

நான் கொண்டு செல்கின்றேன்: ______________

ServiceOntario

## பட்டியல் 2 வதிவிட சான்று
## ஒன்றைத் தெரிவு செய்யுங்கள்:

- செல்லுபடியாகும் ஒன்ராறியோ வாகனசாரதி அனுமதிப்பத்திரம் அல்லது தற்காலிக வாகனசாரதி அனுமதிப்பத்திரம் (அதே முகவரியுடன் புகைப்படம் கொண்ட அனுமதிப்பத்திரம் கூட இணைக்கப்பட்டிருந்தால் மட்டுமே)
- பொதுநலப் பயன்பாட்டு கட்டணச்சீட்டு (வீட்டுத் தொலைபேசி, கேபிள் ரிவி, பொதுசன பயன்பாட்டுச் சேவைகள் ஆணைக்குழு, மின்சாரம், எரிவாயு, தண்ணீர்)
- சேமிப்பு அல்லது காசோலைக் கணக்குகளுக்கான மாதாந்தம் தபாலில் அனுப்பப்படும் வங்கிக் கணக்கு அறிக்கைகள் (இதில் ரசீதுகள், வங்கிப் புத்தகங்கள், கடிதங்கள் அல்லது தானியங்கி வங்கி இயந்திர ரசீதுகள் அடங்கமாட்டா)
- வேலை தருனர் பதிவு (சம்பளச்சீட்டு அல்லது வேலைநிறுவனத்தின் கடிதத்தலைப்பில் வேலைதருனரால் எழுதப்பட்ட கடிதம்)
- பாடசாலை, கல்லூரி அல்லது பல்கலைக்கழக தேர்வு அறிக்கை அட்டை அல்லது தேர்வு விபரப் பத்திரம்
- பிள்ளை வரி நலன் அறிக்கை
- வருமான வரி மதிப்பீடு (மிக அண்மைக்காலத்தினது)
- காப்புறுதிப் பத்திரம் (இல்லம், குடியிருப்பாளர், வாகனம் அல்லது ஆயுள்)
- வீட்டு அடமானம், வாடகை அல்லது குத்தகை ஒப்பந்தம்
- ஒன்ராறியோ மோட்டார் வாகன அனுமதிப்பத்திரம் (வாகன இலக்கத்தகடு அல்லது வாகனப் பகுதிகள்)
- சொத்து வரி கட்டணச்சீட்டு
- ஒன்ராறியோ வேர்க்ஸ் அல்லது ஒன்ராறியோ இயலாமை ஆதரவுத் திட்டத்திற்கான கொடுப்பனவு நேரடி வங்கிக் கணக்கு வைப்பறிக்கை
- வேலைக் காப்புறுதி நலன்கள் கொடுப்பனவு அறிக்கைத்துண்டு T4E
- வயது முதிர்ந்தோர் பாதுகாப்புக் கொடுப்பனவு அறிக்கைத்துண்டு T4A (OAS) அல்லது கனடா ஓய்வூதியத் திட்ட நலன்கள் கொடுப்பனவு விபரத்துண்டு T4A (P)
- ஒரு நிதிசார் நிறுவனத்திடமிருந்து (வங்கி, நம்பிக்கை நிறுவனம், கடனளிப்பு ஒன்றியம்) பெற்ற பதிவு செய்யப்பட்ட ஓய்வுபெறல் சேமிப்புத் திட்ட (Registered Retirement Savings Plan /RRSP) அறிக்கை, பதிவு செய்யப்பட்ட ஓய்வுபெறல் வருமான நிதிய (Registered Retirement Income Fund /RRIF) அறிக்கை அல்லது பதிவு செய்யப்பட்ட வீட்டு உரிமை சேமிப்புத் திட்ட (Registered Home Ownership Savings Plan /RHOSP) அறிக்கை
- வேலையிட பாதுகாப்பு மற்றும் காப்புறுதிச் சபை நலனீட்டு அறிக்கை T5007
- உங்கள் கனடா ஓய்வூதியத் திட்டத்திற்கான பங்களிப்பு பற்றிய அறிக்கை (Canada Persion Plan Statement of Contributions)
- செல்லுபடியாகும் ஒன்ராறியோ புகைப்பட அட்டை

☐ பின்வரும் பட்டியலில் இருந்து ஓர் ஆவணம்:

### பட்டியல் 2 ஒன்ராறியோ வதிவுக்கான சான்று

உங்கள் பெயரையும் தற்போதைய வீட்டு முகவரியையும் காட்டி ஒன்ராயோவிலேயே உங்கள் முதன்மையான வசிப்பிடம் உள்ளது என உறுதிசெய்யும் ஓர் ஆவணம்.

நான் கொண்டு செல்கின்றேன்: _______________

ServiceOntario

## பட்டியல் 3 அடையாளத்திற்கான ஆதாரம் ஒன்றைத் தெரிவு செய்யுங்கள்:

- பணக்கடன் அட்டை
- செல்லுபடியாகும் ஒன்ராறியோ வாகனசாரதி அனுமதிப்பத்திரம் அல்லது தற்காலிக வாகனசாரதி அனுமதிப்பத்திரம்
- செல்லுபடியாகும் ஒன்ராறியோ புகைப்பட அட்டை
- கனேடிய குடிவரவு அடையாள அட்டை
- கனேடிய பிரஜாஉரிமைச் சாட்சிப்பத்திரம் (பிளாஸ்டிக் அட்டை)
- பூர்வீக இந்திய அந்தஸ்து சாட்சிப்பத்திரம் (கடுதாசி அல்லது பிளாஸ்டிக் அட்டை)
- நிரந்தர வதிவு உறுதிப்பத்திரம் (IMM 5292) (கையொப்பம் காண்பிக்கப்பட்டால் மட்டும்)
- தற்போதைய வேலைபெறுநர் அடையாள அட்டை
- தற்போதைய தொழில்சார் சங்க உரிமம்
- வயது முதிர்ந்தோர் பாதுகாப்பு அட்டை
- ஒன்ராறியோ மோட்டார் வாகன அனுமதிச் சீட்டு (வாகன அடையாள இலக்கத்தகட்டுப் பகுதி)
- (கனேடிய அல்லது பிறநாட்டு) கடவுச்சீட்டு
- நிரந்தர வதிவாளர் அட்டை (கையொப்பம் காண்பிக்கப்பட்டால் மட்டும்)
- வதிவிட உரிமை பெறல் பதிவு (IMM 1000)
- மாணவர் அடையாள அட்டை
- தொழிற்சங்க அட்டை

☐ பின்வரும் பட்டியலில் இருந்து ஓர் ஆவணம்:

**பட்டியல் 3 - அடையாளத்திற்கான ஆதாரம்**

உங்கள் பெயர், கையொப்பம் ஆகிய இரண்டினையும் காட்டும் ஆவணம் ஒன்று.

நான் கொண்டு செல்கின்றேன்: ______________

## எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்

சில சேவைஒன்ராறியோ நிலையங்கள் சந்திப்புக்கான நேரங்களை வழங்குகின்றன. உங்கள் புதிய ஒன்ராறியோ புகைப்பட ஆரோக்கிய அட்டைக்கு நீங்கள் விண்ணப்பிக்க ஆயத்தமானதும் உங்கள் சமூகத்தில் உள்ள நிலையங்கள் இவ்வாறான சந்திப்பு ஒழுங்குகளை வழங்குகின்றனவா என அறிய, **ServiceOntario.ca/Appointment** என்னும் இணையத்தளத்திற்கு கணினி மூலம் வாருங்கள் அல்லது கட்டணமின்றி **1-888-376-5197** என்ற தொலைபேசி இலக்கத்தை அழையுங்கள்.

நீங்கள் அருகாமையிலிருக்கும் சேவைஒன்ராறியோ நிலையங்களின் பட்டியல் ஒன்றைக் காண்பதற்கு கணினி வழியாக அல்லது உங்கள் கைத்தொலைபேசிக் கருவியில் **ServiceOntario.ca/FindServices** என்ற இணையத்தளத்திற்கு செல்லலாம்.

தகைமை உடைமை பற்றிய மேலதிக தகவலுக்கு தயவுசெய்து **ServiceOntario.ca/HealthCard** என்ற இணையத்தளம் பாருங்கள் அல்லது பின்வரும் இலக்கங்களில் எம்மை அழையுங்கள்:

கட்டணமற்ற (கனடா) தொலைபேசி இலக்கம்: **1-800-267-8097**

செவிப்புலன் குறைவுற்றோருக்கான கட்டணமற்ற (கனடா) தொலைபேசி இலக்கம்: **1-800-268-7095**

இணையத்தளத்தில் எம்மைக் காணுங்கள் **ServiceOntario.ca**

© Queen's Printer for Ontario, 2015
ISBN 978-1-4606-5470-5 (PDF)
Available in English

**ServiceOntario.ca**
CLICK. DONE.

/ServiceOntario